# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075821

C

1. District : VELLORE மாவட்டம் | PS: VIGILANCE & ANTI - CORRUPTION, VELLORE காவல்நிலையம் | Year: 2021 ஆண்டு | FIR No.: 1/2021 மு.த.அ. எண் | Date: 07.01.2021. நாள்

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: P.C. (AMENDMENT) ACT 2018. | Sections பிரிவுகள்: 102 Cr.P.C.

(iii) Act சட்டம்: Cr.P.C. | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : — நாள் முதல் | Date to : 06.01.2021. நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : 16.25hrs நேரம் முதல் | Time to : 19.30 hrs நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.01.2021 | Time நேரம் : 11.30hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-I 2021. | Time நேரம் : 11.30hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL TYPED COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: SOUTH EAST DIRECTION - 1kms.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி OFFICE OF THE ASSISTANT DIRECTOR, LOCAL FUND AUDIT, PERUMAL SAMY BUILDING, OFFICERS LINE, VELLORE.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. JOTHI குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : SAMPATH தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 1965 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : INDIAN நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : DY. INSPECTION CELL OFFICER தொழில் | (g) Address : முகவரி OFFICE OF THE DISTRICT INSPECTION CELL OFFICE, VELLORE COLLECTORATE, VELLORE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) R. PARANTHAMAN (52/2020), Assistant Director-I L.F.A. Department, Vellore. (2). M. MALARMARAN (49/2020), Executive Officer, Pallikonda Town Panchayat, Vellore. (3). V. MARIMUTHU (47/2020) Inspector, O/o the R.J.D., L.F.A Dept, Vellore, (4) S. MURALI (50/2020), Record clerk, O/o the Pallikonda Town Panchayat, Vellore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் "NO - DELAY"

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுத்தவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 7/1/2021

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்.
[signature] 7/1/21.

15. Date & Time of despatch to the court: 07·01·2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 12·30hrs.

Name: பெயர் M. RAJANIKANTH,
Rank: நிலை INSPECTOR OF POLICE,
VIGILANCE & ANTI-CORRUPTION,
VELLORE.

**SUBMITTED:**

இன்று 07.01.2021-ஆம் தேதி காலை 11.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.S.ஜோதி, ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 07.01.2021 S.ஜோதி, ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: இது துறை திடீர் கூட்டு சோதனை – வேலூர் மாவட்டம் – வேலூர் மாவட்ட உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் இரு துறை திடீர் கூட்டு சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்கள் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. ::::: நான் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு துணை அலுவலராக உள்ளேன். வேலூர் ஆபீசர்ஸ் லைன் ரோடில் உள்ள பெருமாள் சாமி கட்டிடத்தில் இயங்கி வரும் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் உதவி இயக்குனர்கள், 2021-ஆம் ஆண்டு புது வருட பிறப்பை முன்னிட்டு, தங்களின் உள்ளாட்சி நிதி தணிக்கை கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், மார்க்கெட் கமிட்டி அலுவலகங்கள், மாவட்ட நூலக ஆணைக்குழு மற்றும் திருவள்ளூர் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அலுவலர்களை, கட்டாயப்படுத்தி பணம் மற்றும் பரிசுப்பொருட்களை லஞ்சமாக வசூல் செய்து வருவதாக எனக்கு நேற்று 06.01.2021-ஆம் தேதி சுமார் 15.00 மணிக்கு நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்று, நான் அந்த தகவலை எனது தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு தெரியப்படுத்தி, எங்களது தலைமையில் நேற்று 06.01.2021-ஆம்தேதி சுமார் 16.00 மணியளவில் நானும், வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.M.ரஜனிகாந்த் மற்றும் குழுவினருடன், மேற்படி வேலூர் ஆபீசர்ஸ் லைன் ரோடில் உள்ள பெருமாள் சாமி கட்டிடத்தின் முதல் தளத்தளத்தில் இயங்கி வரும் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குனர்கள் அலுவலகத்தில் சுமார் 16.25 மணியளவில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அங்கு உதவி இயக்குனர்-I அலுவலக அறைக்கு வெளியே இரண்டு நபர்கள் ஆப்பிள், டைரி மற்றும் இனிப்பு பெட்டிகள் வைத்துக்கொண்டு நின்றிருந்தார்கள். மேற்படி அலுலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் அனைவருக்கும், இருதுறை திடீர் கூட்டு சோதனை குழுவினராகிய நாங்கள் எங்களிடம் பணமோ, பொருளோ ஏதுமில்லை என்பதை சுயபரிசோதனை செய்து காண்பித்து, மேற்படி அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை

ஆரம்பிக்கப்பட்டது. உதவி இயக்குனர்-I, அறையில் இருந்த திரு.R. பரந்தாமன், உதவி இயக்குனர்-I, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களின் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை என்பவர் இருந்தார். அவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.2,200/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த பணம் என்றும், தன்னுடைய செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது மேஜை மற்றும் அறையை சோதனை செய்ய, அவரது மேஜையில் புது வருட டைரி, இனிப்பு பெட்டிகள் இருந்தன. பின்னர், மேற்படி உதவி இயக்குனர்-I அலுவலக அறைக்கு வெளியே ஆப்பிள், டைரி மற்றும் இனிப்பு பெட்டிகள் வைத்துக்கொண்டு நின்றிருந்த இரண்டு நபர்களை விசாரிக்க, அவர்கள் திரு.M.மலர்மாறன், த/பெ மணவாளன், செயல் அலுவலர், பள்ளிகொண்டா தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம் மற்றும் திரு.S.முரளி, த/பெ சண்முகம், பதிவறை எழுத்தர், பள்ளிகொண்டா தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம் என தெரிந்தது. திரு.M.மலர்மாறன், செயல் அலுவலர், பள்ளிகொண்டா தேர்வுநிலை பேரூராட்சி என்பவரை திரேக சோதனை செய்ய, அவரது இடது புற பேண்ட் பாக்கெட்டில் பணம் ரு.55,800/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அந்த பணம் ரு.55,800/- கைப்பற்றப்பட்டது. மேலும், அவர் வைத்திருந்த ஆப்பிள், டைரி மற்றும் இனிப்பு பெட்டிகள் ஆகியவை கைப்பற்றப்படவில்லை. பின்னர், அவருடன் வந்த திரு.S.முரளி, பதிவறை எழுத்தர், பள்ளிகொண்டா தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரது வலது புற பேண்ட் பாக்கெட்டில் பணம் ரு.26,300/- இருந்தது. அந்த பணம் பற்றி விசாரிக்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அந்த பணம் ரு.26,300/- கைப்பற்றப்பட்டது. மேலும், அவர் வைத்திருந்த ஆப்பிள், டைரி மற்றும் இனிப்பு பெட்டிகள் ஆகியவை கைப்பற்றப்படவில்லை. பின்னர், உதவி இயக்குனர்-II அறையில் உட்கார்ந்திருந்த திரு.S.M.ஷ்யாம் சுந்தர், உதவி இயக்குனர்-I, விழுப்புரம் மாவட்ட உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, கூடுதல் பொறுப்பு:உதவி இயக்குனர்-II, இராணிப்பேட்டை மாவட்ட உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை என்பவரை விசாரிக்க, அவர் மாதத்திற்கு இரண்டு முறை வேலூர் உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு வந்து செல்வதாகவும், 06.01.2021 அன்று வேலூர் மண்டல இணை இயக்குனர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களின் உதவி இயக்குனர்களின் கூட்டம் என்பதால் கலந்து கொள்ள வந்திருப்பதாக சொன்னவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.4,050/- இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த பணம் என்றும், தன்னுடைய செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது மேஜை மற்றும் அறையை

சோதனை செய்ய, அவரது மேஜையில் புது வருட டைரி, இனிப்பு பெட்டிகள் இருந்தன. மேலும், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உதவி இயக்குனர்கள் அலுவலகத்தில் இருந்த 1) திரு.S.பாஸ்கரன் (46/2021), த/பெ சின்னதுரை, பதிவறை எழுத்தர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உதவி இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம், 2) திருமதி.A.நீலாவதி (35/2021), க/பெ முருகன், இளநிலை உதவியாளர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உதவி இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம், 3) திரு.C.செந்தில் குமார் (48/2021), த/பெ சின்னப்பன், ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உதவி இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் சோதனை செய்யப்பட்டதில், பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேலும், அந்த அலுவலகத்தின் பதிவறையை சோதனை செய்ய, பதிவேடுகளுக்கு நடுவில் ரூ.7,600/- மற்றும் ரூ.3,170/- கேட்பாரற்று கிடந்தது. அந்த பணத்தை பற்றி உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அலுவலகத்தில் இருந்த உதவி இயக்குனர்கள் மற்றும் அலுவலர்களிடம் விசாரிக்க, அவர்கள் யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை. எனவே, மேற்படி பணம் ரூ.7,600/- மற்றும் ரூ.3,170/- (ஆக மொத்தம் ரூ.10,770/-) உரிமை கோராத பணம் கைப்பற்றப்பட்டது. மேலும், அருகில் இருந்த உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை வேலூர் மண்டல இணை இயக்குனர் அலுவலகத்தில் இருந்த 1) திரு.V.மாரிமுத்து (47/2021), த/பெ வரதன், ஆய்வாளர், வேலூர் மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இணை இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம், 2) செல்வி.M.நளாயினி (42/2021), த/பெ மாணிக்கம், இளநிலை உதவியாளர், வேலூர் மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இணை இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் 3) திரு.S.டீனா ராவணன் (56/2021), த/பெ செந்தாமரை, பதிவறை எழுத்தர், வேலூர் மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இணை இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் 4) திரு.J.சுரேஷ் குமார் (33/2021), த/பெ ஜம்புலிங்கம், உதவி ஆய்வாளர், வேலூர் மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இணை இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் 5) திரு.R.பூபதி (45/2021), த/பெ ராமமூர்த்தி, துணை ஆய்வாளர், வேலூர் மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இணை இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் ஆகியோர்களை சோதனை செய்ததில், திரு.V.மாரிமுத்து (47/2021), த/பெ வரதன், ஆய்வாளர், வேலூர் மண்டல உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை இணை இயக்குனர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ததில், அவரிடம் மட்டும் ரூ.11,800/- இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் விசாரிக்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அந்த பணம் ரூ.11,800/- கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.V.மாரிமுத்து என்பவரின் மேஜையில் இனிப்பு பெட்டிகள், சால்வை, டைரி ஆகியவை இருந்தன. பின்னர், உதவி இயக்குனர்-I அலுவலக வருகைப்பதிவேடு மற்றும் வேலூர்

மண்டல இணை இயக்குனர் அலுவலக வருகைப்பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. உதவி இயக்குனர்-I அலுவலக வருகைப்பதிவேட்டில் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் உதவி இயக்குனர்-I திரு.பரந்தாமன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். மண்டல இணை இயக்குனர் அலுவலக வருகைப்பதிவேட்டில் நானும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் திரு.மாரிமுத்து ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். மேலும், மாலை சுமார் 18.45 மணியளவில், திரு.G.இராஜேந்திரன், துணை இயக்குனர், தணிக்கை, வேலூர் மாநகராட்சி, வேலூர், பொறுப்பு: மண்டல இணை இயக்குனர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, வேலூர் மண்டலம். அவர்கள் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தார். அவருக்கு இரு துறை திடீர் கூட்டு சோதனையின் விவரம் விளக்கி கூறப்பட்டது. மேற்படி இரு அலுவலகங்களிலும் கொடிநாள் வசூல் எதுவும் இல்லை என்று கூறினார்கள். இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.93,900/- மற்றும் யாரும் உரிமை கோராத பணம் ரூ.10,770/- ஆக மொத்தம் பணம் ரூ.1,04,670/- (2000x25=50000, 500x90=45000, 200x27=5400, 100x41=4100, 50x2=100, 20x2=40, 10x3=30) கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, நேற்று 06.01.2021-ஆம் தேதி 19.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், அலுவலர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. இன்று 07.01.2021 ஆம் தேதி காலை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் ஆஜராகி, வேலூரில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குனர் மற்றும் வேலூர் மண்டல இணை இயக்குனர் அலுவலகங்களில் இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொண்டதில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் மற்றும் உரிமை கோராத லஞ்சப்பணம் ரூ.1,04,670/- மற்றும் பதிவேடுகளை நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். ஒம்./- xxxxxx (S.ஜோதி) ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir,

Received the complaint on 07-01-2021 at 11.30 hrs and registered FIR in Vellore V&AC Cr.No.01/2021, u/s 7(a) of PC (Amendment) Act 2018 and 102 Cr.PC. Sd/-XXXXXX (M.RAJANIKANTH), Ins/V&AC/Vellore.

The FIR in original along with the complaint, Joint Surprise Check Proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and other copies to the officers concerned.

7/1/21.

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Vellore-1.